**2. தூது இலக்கியம் பற்றி குறிப்பு வரைக.**

(i) தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கடவுளிடம் தன் காதலைத் தெரிவித்து வருமாறு தலைவி தூது அனுப்புவதாகவே தூது இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

(ii) தூதுவன் பெருமை, தலைவனின் சிறப்புக்கள், செல்லவேண்டிய வழி, தலைவனைக்காணும் வேளை, தூது செய்தி ஆகியவை இந்நூலில் அழகுற வருணிக்கப்படுகிறது. தமிழ் விடுதூதே மிகச் சிறந்த நூலாகும்.

(iii) மதுரைச் சொக்கநாதரிடம் காதலில் கொண்ட தலைவி தன் காதலைத் தெரிவித்து அவர் இசைவறிந்து வருமாறு தமிழைத் தூதனுப்பி வைப்பதாக இந்நூல் பாடப்பெற்றுள்ளது.

**3. 'தமிழோவியம்' எனும் கவிதை நூலைப் படைத்த தமிழன்பன் பற்றி குறிப்பு வரைக.**

(i) ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

(ii) ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.

(iii) இவரது வணக்கம் வள்ளுவ என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. தமிழன்பன் கவிதைகள் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


(iv) இவரது கவிதைகள் இந்தி, ஆங்கிலம், உருது, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

**4. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்களிப்பை விளக்குக.**

(i) தமிழில் உள்ள அறிவியல் செய்திகளை மேலும் வெளிக்கொணர்வோம்.

(ii) கன்னித் தமிழ் மாறாது கணினித் தமிழ் ஆக்குவோம்.

(iii) அயல்மொழி மோகம் கொண்டு திரிவோரை அன்னைத் தமிழ் மோகம் கொள்ள வைப்போம்.

**5. தன்வினை, பிறவினை, காரணவினை சான்றுடன் விளக்குக.**

**தன்வினை :** வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

**சான்று :** பந்து உருண்டது.

**பிறவினை :** வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும்.

**சான்று :** பந்தை உருட்டினான்.

**காரணவினை :** எழுவாய் தானே வினை நிகழ்த்தாமல், வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை எனப்படும்.

**சான்று :** பந்தை உருட்ட வைத்தான்.

☆ ☆ ☆



www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

## அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (1 × 5 = 5)

1. தமிழ்விடு தூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. "தமிழ்விடு தூது" - எனும் நூலில் இடம் பெற்ற கண்ணிகள் எண்ணிக்கை?
அ) 266 ஆ) 267
இ) 268 ஈ) 269

3. "தித்திக்கும் தெள் அமுதாய்த் தெள் அமுதின் மேலான முத்திக்கனியே என் முத்தமிழே" - இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது?
அ) தமிழ்விடு தூது ஆ) விறலிவிடு தூது
இ) தமிழோவியம் ஈ) இவை ஏதுமில்லை

4. "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையுன் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும் அப்படித்தான்" - என்று குறிப்பிட்டவர்.
அ) கண்ணதாசன் ஆ) ஈரோடு தமிழன்பன்
இ) முத்துலிங்கம் ஈ) மீனாட்சி சுந்தரம்

5. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (1 × 4 = 4)

6. கவிஞர் ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர் ..................
7. வண்ணம்............. வகைப்படும்.
8. சிற்றிலக்கியங்கள்............. வகைப்படும்.
9. உலகில் மூவாயிரம் மொழிகள் ........ (பேசு)

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

10. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
11. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
12. தன்வினை, பிறவினை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
13. வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
14. தூது இலக்கியம் பற்றி குறிப்பு வரைக.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 5 = 10)

15. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
16. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களையும் தமிழ்ச் சொற்களையும் தொகுத்து எழுதுக.
17. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.
18. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக
19. தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.
20. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை? சான்று தருக.

☆ ☆ ☆

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores

# இயல் 3 உள்ளத்தின் சீர்

## பாடப் பகுதி

| | |
|---|---|
| உரைநடை உலகம் | ஏறுதழுவுதல் |
| கவிதைப் பேழை (செய்யுள்) | மணிமேகலை – சீத்தலைச் சாத்தனார் |
| விரிவானம் (துணைப்பாடம்) | அகழாய்வுகள் (பட்டிமன்றம்) |
| கற்கண்டு (இலக்கணம்) | வல்லினம் மிகும் இடங்கள் |
| வாழ்வியல் | திருக்குறள் – திருவள்ளுவர் |



## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. பொருந்தாத இணை எது?** ※

அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

[விடை: ஆ) திருவாரூர்-கரிக்கையூர்]

**2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

[விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்]

**3. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று-**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

[விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது]

**4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

[விடை: ஈ) தொகைச்சொற்கள்]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

5. **சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி
இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

i) ஆ - அ - இ ii) ஆ - இ - அ
iii) இ - ஆ - அ iv) இ - அ - ஆ [விடை: i) ஆ-அ-இ]

## குறுவினா

1. **நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

நாங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு என அழைக்கப்படுகிறது.

2. **தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?**

(i) மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று. நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு.

(ii) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது. ரோமானியர்களின் பழங்காசுகள் கோவையில் கண்டெடுத்தனர்.

(iii) கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கு வலிமையான கட்டமைப்பை உருவாக்கலாம்.

3. **ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.** ※

(i) ஏறுதழுவுதலைக் காளைகளின் பாய்ச்சல் என எடுத்துரைக்கிறது – கலித்தொகை

(ii) சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை – ஏறுகோள்

(iii) கண்ணுடையம்மன் பள்ளு – எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வை எடுத்துரைக்கிறது.

4. **பழமணல் மாற்றுமின்: புதுமணல் பரப்புமின்- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தின் முதல் காதையான விழாவறை காதையில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:** விழாக்கள் நிறைந்த அம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள்.

**விளக்கம்:** இந்திரவிழாவின் முன்னேற்பாடுகளுள் ஒன்றான வீடுகளின் முன்னுள்ள தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை எடுத்துவிட்டு புதிய மணலைக் கொட்டி அவ்விடங்களெல்லாம் விழா சிறப்பாக நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திடுமாறு அறிவிக்கப்படுகிறது.

5. **பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

(i) பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கையும் ஏற்றுக் கொள்கிறோம். 'மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்' என்று சிலப்பதிகாரத்திலும் (காதை 5 அடி/02).

**3. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

(i) ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்.

(ii) தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கொண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

(iii) அகழாய்வில் கிடைத்த ஆவணங்கள் அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

**4. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

எங்கள் ஊரில் திரௌபதியம்மன் கோவில் ஆண்டுதோறும் தீமிதி விழா நடைபெறும். அவ்விழா தொடங்குவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன் ஊர் கூட்டி காப்பு கட்டும் விழாவைத் தொடங்குவார்கள். அன்றிலிருந்து திருவிழா முடிந்த பிறகு காப்பு களைக்கப்படும். இந்நாட்களில் இங்குள்ளவர்கள் யாரும் வெளியூருக்குச் செல்லமாட்டார்கள்.

திருவிழாவிற்கான முன்னேற்பாடுகளாக கோவில் மற்றும் கோவிலைச் சுற்றி உள்ள இடங்களைச் சுத்தம் செய்வர். ஊரெங்கும் விழாக்கோலம் பூணும். ஊரில் உள்ள அனைத்து இல்லங்களும் வெள்ளையடிக்கப்பட்டும் பல வண்ணங்களில் வீட்டை அழகுபடுத்துவர்.

அனைத்து வீடுகளிலும் மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டும், வாழை மரங்கள் கட்டப்பட்டும் இருக்கும். மாட வீதிகளில் உள்ள இல்லங்களும் அலங்கார விளக்குகளால் அழகுப்படுத்தப்பட்டிருக்கும். எங்கள் ஊரில் உள்ள அனைவருடைய இல்லங்களிலும் உறவினர்களின் வருகை இருக்கும். எங்களுக்குப் பள்ளி விடுமுறை அறிவிக்கப்படும். சாலையோரக் கடைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும்.

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளான பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம் போன்றவைகள் நடைபெறும். இதனைப் பார்க்க வரும் மக்கள் சாலையில் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். பாட்டுக் கச்சேரி, இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்.

கோவிலுக்கு அருகில் தீ மிதிப்பதற்காக நெருப்பை மூட்டி வைத்திருப்பார்கள். பெண்கள் பலர் கூடி பொங்கல் வைப்பார்கள். இது ஒரு புறம் இருக்க மற்றொருபுறம் குமரிப் பெண்கள் கும்மியடித்தல், நண்பர்களுடன் உள்ளக் களிப்புடன் பேசி மகிழ்தல் என இவற்றைப் பார்ப்பதற்கே கண்கொள்ளக் காட்சியாக இருக்கும்.

அம்மன் திருவீதி உலா நடைபெறும் அம்மன் மாடவீதியில் உள்ள வீடுகளில் நின்று காட்சிக் கொடுப்பதும் அங்குள்ளோர் அம்மனுக்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் ஆரத்தி எடுப்பதும் எவராலும் மறக்க இயலாது. திருவிழாவின் போது எங்கள் ஊரைப் பார்க்கும் போது வானில் மின்னிய விண்மீன்கள் எல்லாம் பூமியில் வந்து இறங்கியது போல் இருக்கும்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

## மொழியை ஆள்வோம்

**பொன்மொழிகளை மொழி பெயர்க்க :**

1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

விடை: ஒரு நாட்டின் கலாச்சாரம் மக்களின் இதயங்களிலும் அதன் ஆத்மாவிலும் வாழ்கிறது. - மகாத்மா காந்தி

2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru

விடை: மக்களின் மனதில் உண்மையான கண்ணாடி அவர்களின் கலையாகும். - ஜவகர்லால் நேரு

3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa

விடை: அன்புக் குறைபாடும் இரக்கமின்மையும்தான் மிகப்பெரிய பிரச்சனையாகும். - அன்னை தெரசா

4. You have to dream before your dreams can come true. - A.P.J. Abdul Kalam ※

விடை: உங்கள் கனவு நனவாகும் வரை கனவு கண்டுக் கொண்டே இருங்கள். - A.P.J. அப்துல் கலாம்

5. Winners don't do different things; they do things differently. - Shiv Khera

விடை: வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை. அவர்கள் செயல்களைத் தனித்துவத்துடன் செய்கிறார்கள். - ஷிவ் கேரா

### வடிவம் மாற்றுக

**பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

விடை:

டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல் பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி,

உள்ளத்தின் சீர்

www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறுமாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர் பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?

ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது? [விடை: **காங்கேயம்**]

**2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.**

அ) கர்நாடகம் ஆ) கேரளா

இ) இலங்கை ஈ) ஆந்திரா [விடை: **இ) இலங்கை**]

**3. பிரித்து எழுதுக. கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன [விடை: **ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன**]

**4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?**

அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர் [விடை: **இ) செய்தித்தொடர்**]

உள்ளத்தின் சீர்

www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

# மொழியோடு விளையாடு

**பொருள் எழுதித் தொடரமைக்க.**

(எ.கா) அலை – கடலலை – இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாகவுள்ளது.
அழை – வரவழைத்தல் – என் நண்பர்களை வரவழைத்துள்ளேன்.

1. கரை – ஆற்றின் ஓரம் (ஆற்றங்கரையோரம் மரங்கள் உள்ளன.)
   கறை – அழுக்கு (விளையாடும்போது வெள்ளைச் சட்டையில் கறையாகி விட்டது.)
2. குளவி – ஈ, வண்டு. (சிறுவன் மரத்தினருகே சென்றபோது அவனைக் குளவி கொட்டியது.) ※
   குழவி – குழந்தை (குழவி நோயின்றி வாழ்தல் இனிமையானது.) ※
3. வாளை – மீன் வகை (வாளை மீன் நீளமாக இருக்கும்.)
   வாழை – மர வகை. (வாழை மரத்தில் இருந்து கிடைக்கும் பூ, இலை, தண்டு, காய், கனி என எல்லாமே பயன் தருகிறது.)
4. பரவை – கடல் (கடல் நீர் பரந்து விரிந்து இருப்பதால் கடல் பரவை என்ற பெயரைப் பெற்றுள்ளது.)
   பறவை – பறப்பவை (நாம் பறவைகளை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும்.)
5. மரை – மான் (மான்கள் வேகமாக ஓடும். அதற்குக் கொம்புகள் இருக்கும்.)
   மறை – வேதம் (மறை ரிக், யசூர், சாமம், அதர்வனம் என நான்கு வகைப்படும்.)

## அகராதியில் காண்க

1. இயவை – துவரை, மலைநெஞ்சை
2. சந்தப்பேழை – சந்தனப்பெட்டி
3. சிட்டம் – பெருமை
4. தகழ்வு – வீண் ஆடம்பரம்
5. பௌரி – பண் வகை

## பொருள் தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித்தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

காலங்களில் தெருவில் வைக்காதீர்கள் காப்பு கம்பிகள் கவனக் குறைவுடன் ஆகியவற்றின் மீது காலை அறுந்த மழை மின்கம்பிகள்.

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


3. மரத்தில் காய்கள் ............. ஆகக் காய்த்திருந்தன (4)
4. ஆடிப்பட்டம் தேடி....... (2)
5. உரிச்சொற்களுள் ஒன்று (2)
6. ............... சிறந்தது (2)
8. நேரத்தைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)
15. காய் பழுத்தால் ........ (2)

**கீழிருந்து மேல்**

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது(3)
17. யா முதல் வரும் வினாப்பெயர்(2)
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4).

## விடைகள்

**இடமிருந்து வலம்** : 2. இந்திரவிழா, 5. தவறு, 7. தவளை ஒட்டம், 10. விதி, 13. மாவடி, 19. கோள்

**வலமிருந்து இடம்** : 9. சிரை, 11. ஆய்வு, 12. சாத்தனார், 16. காளை, 18. தனியாள்

**மேலிருந்து கீழ்** : 1. ஏறுதழுவுதல், 2. இவளை, 3. திரட்சி, 4. விதை, 5. தவ, 6. நனி, 8. ஓரை, 12. சாடிகள், 15. கனி

**கீழிருந்து மேல்** : 14. வத்தி, 17. யார், 18. தனியாள்



## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



**விடை: தமிழர் கலைகள்**

தைத் திங்களைக் கொண்டாட
தை அவளும் கோலமிட
நாகசுரம் இசை ஒலித்திட
நாட்டிய மங்கை நடனமாட
ஆநிரை யெல்லாம் அசைந்தாட
ஆண்க ளெல்லாம் ஆனந்தப்பட
மங்கல தீபமெல்லாம் ஒளிவீசிட
மங்கை யரெல்லாம் விளையாட
ஊரொன்றாய்ச் சேர்ந்ததே
உறவுகளாய்த் திளைத்ததே!


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

# கற்பவை கற்றபின்

## ஏறுதழுவுதல்

**1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**மாணவன் 1** : ஏறுதழுவுதல் எனப் பல பெயர்களில் வழங்கப்பெறும் சல்லி என்பது விழாவின்போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது.

**மாணவன் 2** : பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவுதல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன.

**மாணவன் 1** : ஏறுதழுவுவதற்கும் சல்லிக்கட்டுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. முல்லை நிலத்து மக்களாகிய ஆயரிடம் மட்டுமே ஏறுதழுவுதல் இடம் பெற்றது. தற்போது சல்லிக்கட்டில் ஆயர் மட்டுமின்றிப் பல திறத்த வரும் பங்கேற்கிறார்கள். வென்றவர்கள் பணமுடிப்பினைப் பரிசாகப் பெறுவார்கள். ஏறுதழுவுதல் விழா, தெய்வ நம்பிக்கையுடன் தொடர்புடையதாக இருக்கவில்லை. ஆனால் சல்லிக்கட்டு கிராம தேவதைகளின் வழிபாட்டு நம்பிக்கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கிறது.

**மாணவன் 2** : சங்க காலத்தில் ஏறுதழுவி வெற்றி பெறும் ஆண்மகனுக்குப் பெண் கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் இதற்கு மாறாக வெற்றி பெற்றவர்க்குப் பணமும் பரிசுகளும் வழங்கப்படுகின்றது.

**மாணவன் 1** : சங்க காலத்தில் ஏறுதழுவதலில் தமிழர் அறத்தோடு நின்றனர். காளையை அடக்குபவர் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தமாட்டார்கள். ஆனால் இன்று காளைமாட்டிற்கு மதுவைக் குடிக்கச் செய்து ஏறுதழுவுதல் நிகழ்த்தப்படுகிறது. இதனால் மிருகவதை தடுப்புச் சட்டத்தின்படி ஏறுதழுவுதல் என அழைக்கப்படும். சல்லிக்கட்டு நடத்துவதற்கு அரசு தடை விதித்தது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். நம் தமிழகத்தில் இத்தடையை உடைக்க வேண்டும் என்று 2017 சனவரியில் மெரினா கடற்கரையில் பல அமைப்புகள் சேர்ந்து போராடியது. அதன் விளைவாக 2017 சனவரிக்குப் பிறகு தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இவ்விழா அரங்கேறியது.

**மாணவன் 1** : சங்க காலத்தில் நடைபெற்ற ஏறுதழுவுதலைப் போல அறத்தோடு நின்று இப்போட்டிகளை நிகழ்த்த வேண்டும் எனக் கூறி அமர்கிறோம். நன்றி! வணக்கம்.



www.surabooks.com

(iii) கல்வெட்டுகளில் உள்ளதை எவ்வாறுப் படி எடுப்பீர்கள்?

(iv) கல்வெட்டுகளில் பல வகையான எழுத்துகள் இருக்கும். எவ்வாறு உங்களால் அவற்றைப் படி எடுக்க முடியும்? அவ்வெழுத்துகள் பற்றி கூறுங்கள்.

(v) உங்களுடைய ஆராய்ச்சியில் முக்கியமான ஆராய்ச்சி என்று களப்பிரர் பற்றியது என்று கூறியுள்ளீர்கள். அந்த அனுபவம் எவ்வாறு இருந்தது?

(vi) உங்களை மிகவும் நெகிழ வைத்த ஆய்வு எது?

**3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.**

**தொன்மையான இடம் – காஞ்சிபுரம் :**

(i) எங்கள் ஊருக்கு அருகில் உள்ள ஊர் காஞ்சிபுரம் இது தமிழ்நாட்டின் தொன்மை நகரங்களுள் ஒன்று.

(ii) தொண்டை நாட்டின் தலைநகரம்.

(iii) சைவமும் வைணவமும் தழைத்தோங்கிய இடம்.

(iv) இந்நகரம் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்கள் பலவற்றுள் இடம் பெற்றுள்ளது.

(v) இந்நகரின் பல பெயர்களுள் சில காஞ்சி, கஞ்சி, காஞ்சி மாநகர், காஞ்சி நாடு, கச்சி, சச்சிப்பேடு, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம்.

(vi) 2500 ஆண்டுகளுக்கு முன்பே தொண்டைமான் இளந்திரையன் காஞ்சி நகரத்தை ஆண்டதைப் பரிபாடல் கூறுகிறது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பதஞ்சலி முனிவரால் காஞ்சி குறிப்பிடப்படுகிறது.

(vii) மாதவியின் மகளான மணிமேகலை துறவு பூண்டு, புத்த சமயக் கொள்கைகளைக் கற்றறிந்தாள். அவ்விடம் அறவண அடிகள் தங்கியிருந்ததால் அறவணஞ்சேரி என்றும் அழைக்கப்படுகிறது.

(viii) சீன யாத்திரிகர் யுவான் சுவாங், காஞ்சிபுரம் பற்றியும் பல்லவர் காலப் பௌத்தம் பற்றியும் பல அரிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். போதிதர்மர் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் சீனாவுக்கு வந்ததாக இட்சிக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவர் தர்மபாலர் கி.பி.7ஆம் நூற்றாண்டு காஞ்சிபுரத்தில் வாழ்ந்ததாக யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

(ix) சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியவர்களால் பாடல் பெற்ற தலம்.

(x) காஞ்சிபுரம் தற்போது ஒரு நகராட்சி காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. இங்கு பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான ஏகாம்பரநாதர் கோயில் 51 சக்தி பீடங்களில் ஒன்றான காமாட்சியம்மன் கோவில், வைணவத் தலங்களில் முதன்மையான வரதராஜப் பெருமாள் கோவில் இவையெல்லாம் இந்நகருக்கு அழகு சேர்க்கின்றன.



www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores



## வல்லினம் மிகும் இடங்கள்

**1. வல்லினம் மிகலாமா?**

அ) பெட்டி......... செய்தி [விடை: பெட்டிச்செய்தி]

ஆ) விழா................ குழு [விடை: விழாக்குழு]

இ) கிளி............... பேச்சு [விடை: கிளிப்பேச்சு]

ஈ) தமிழ் ..................... தேன் [விடை: தமிழ்த்தேன்]

உ) தை..........பூசம் [விடை: தைப்பூசம்]

ஊ) கூட.............. கொடு [விடை: கூடக்கொடு]

எ) கத்தியை விட............ கூர்மை [விடை: கத்தையைவிடக் கூர்மை]

ஏ) கார்.......... பருவம் [விடை: கார்ப்பருவம்]

**2. தொடர் தரும் பொருளைக் கூறுக.**

அ) சின்னக்கொடி – சின்னத்தை உடைய கொடி
சின்னகொடி – சிறிய கொடி

ஆ) தோப்புக்கள் – தோப்பிலிருந்து கிடைக்கும் கள்
தோப்புகள் – பல மரங்கள் நிறைந்த தோப்பு

இ) கடைப்பிடி – கொள்கையைக் கடைப்பிடி
கடைபிடி – இறுதியானதைப் பிடி

ஈ) நடுக்கல் – நடுவில் வைக்கப்படும் கல்
நடுகல் – இறந்தோரின் நினைவாக வைக்கப்படும் கல்

உ) கைம்மாறு – பதிலுதவி செய்தல்
கைமாறு – உன் கையைப் பிறரிடத்தில் மாற்று

ஊ) பொய்ச்சொல் – பொய்யாகச் சொன்ன சொல்
பொய்சொல் – பொய்யைச் சொல்

**3. சிந்தனை வினா.**

**நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதி வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.**

(i) அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்காது.

(ii) நாளிதழ்களை மாணவர்களும் படிக்கின்றனர். அவர்கள் அப்பிழைகளுடன் படித்தார்களானால் அவர்களும் அவற்றைத்தான் பின்பற்றுவார்கள்.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores



(iii) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதும்போது பொருள் வேறுபடுவதை அறிய வேண்டும்.

(iv) எடுத்துக்காட்டாக 'கைம்மாறு – கைமாறு' என்ற சொற்களை எடுத்துக் கொள்வோம்.

கைம்மாறு – உதவி

கைமாறு – ஒருவர் கையிலிருந்து ஒரு பொருள் மற்றவர் கைக்கு மாறுதல்.

(v) எனவே வல்லினம் மிகவேண்டிய இடங்களில் வல்லினம் இட்டு எழுத வேண்டியதின் இன்றியமையாமையை மாணவர்கள் அறிய வேண்டும்.

**4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**விடை :**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு, தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதிப் படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களில் பலர் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலான பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்த கோடரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானைத் தந்தத்தினால் செய்த சீப்பு, மோதிரம், பசுமை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவற்றை கிடைத்துள்ளன.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


வாழ்வியல்

# திருக்குறள்

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| பெயர் | : திருவள்ளுவர் |
| பெற்றோர் | : ஆதி, பகவன் |
| மனைவி | : வாசுகி |
| ஊர் | : மயிலை |
| காலம் | : கி.மு. 31-ம் நூற்றாண்டு |
| சிறப்புப் பெயர்கள் | : தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர். |

## நூல் வெளி

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

உலகின் பல மொழிகளிலும் பன்முறை மொழிபெயர்க்கப்பட்டதுடன், இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக் கருத்துகளால் இடம் பெற்றது திருக்குறள். தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் இந்நூல். பிற அறநூல்களைப் போல் அல்லாமல் அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.



### பொறையுடைமை

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

**தெளிவுரை** : தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலை சிறந்தது.

**அணி** : உவமையணி

2. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.**

**தெளிவுரை** : பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாமலிருப்பதே நன்றாம்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

### பழைமை

**17. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்**
**கேளாது நட்டார் செயின்.**

**தெளிவுரை** : நட்பின் உரிமையில தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர் விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர்.

### தீ நட்பு

**18. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.**

**தெளிவுரை** : செயல்வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

### பேதைமை

**19. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.**

**தெளிவுரை** : தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இல்லாமை, ஏதொன்றையும் பாதுகாக்காமை ஆகியவை பேதையின் செயல்கள்.

**20. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

**தெளிவுரை** : படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவருக்குக் கூறியும்தான் அதன்படி செயல்படாத பேதையைப் போலப் பேதை யாருமில்லை.

## கற்பவை கற்றபின்

**1. பாடத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

**விடை: இ)** செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

**2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

பாடல் :

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய்-மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

www.surabooks.com

பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான்.

உடனே மூன்றாவது ஆள். "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான்.

நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

3. ஓதி உணர்த்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

**விடை:** 3. ஓதி உணர்த்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. சிந்துவெளி நாகரிக வரலாற்றில் ............. முக்கிய பங்கு வகிக்கின்றது.**

அ) காளை ஆ) மாடு
இ) ஆடு ஈ) பசு [**விடை:** அ) காளை]

**2. கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலை குறிப்பதாகக் கூறியவர்**

அ) காளமேகப் புலவர் ஆ) ஐராவதம் மகாதேவன்
இ) இளங்கோவடிகள் ஈ) மருதனார்

[**விடை:** ஆ) ஐராவதம் மகாதேவன்]

**3. பட்டிமண்டபம் என்பது .................**

அ) இலக்கிய மரபு ஆ) இலக்கியம்
இ) இலக்கிய வழக்கு ஈ) இலக்கிய நிகழ்வு

[**விடை:** இ) இலக்கிய வழக்கு]

**4. நிலாச்சோறு - இங்கு வல்லினம் மிகுந்தமைக்கு காரணம்** ※

அ) உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்
ஆ) திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்
இ) ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும்
ஈ) வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்

[**விடை:** இ) ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும்]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

5. **அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடே. இக்கூற்றினை விளக்குக.**

(i) 1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

(ii) அகழாய்வில் கிடைத்த ஆவணங்கள் அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடே ஆகும்.

6. **தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது - இக்கூற்றினை விளக்குக.**

கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கு வலிமையான கட்டமைப்பை உருவாக்கலாம். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

7. **மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்ள அகழாய்வு எப்படி துணைநிற்கின்றது?**

மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்கு அகழாய்வு துணை நிற்கின்றது.

8. **தலையாய செல்வம் எது? ஏன்?**

தலையாய செல்வம் செவிச்செல்வம். பிற வழிகளில் வரும் செல்வங்களை விடச் சிறந்தது.

9. **வள்ளுவர் குறிப்பிடும் பேதையின் செயல்கள் யாவை?**

(i) தகாத செயலுக்கு வெட்கப் படாமை

(ii) தக்கவற்றை நாடாமை

(iii) பிறரிடம் அன்பு இல்லாமை

(iv) எதனையும் பாதுகாக்காமை.

10. **பசுமண் கலத்துநீரை திருவள்ளுவர் எதற்கு உவமிக்கிறார்?**

பசுமண் கலத்துநீரை(சுடாத மண்கலத்தில் நீர்) திருவள்ளுவர் தீயசெயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தலுக்கு உவமிக்கிறார்.

## சிறுவினாக்கள் :

1. **மணிமேகலை நூல் குறிப்பு வரைக.**

(i) மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

(ii) மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.

(iii) இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம். பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம்.



www.surabooks.com

(iii) விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்கங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள். துகில் கொடிகளையும் கம்புகளில் கட்டிய கொடிகளையும் பெரிய மாடங்களிலும் மாடங்களின் வாயில்களிலும் சேர்த்துக் கட்டுங்கள்.

**பட்டிமண்டபம் ஏறுமின் :** குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் நல்லன பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள். அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

**சினமும் பூசலும் கைவிடுதல் :**

(i) மாறுபாடு கொண்ட பகைவர்களிடம்கூடக் கோபமும் பூசலும் கொள்ளாது அவர்களைவிட்டு விலகி நில்லுங்கள்.

(ii) வெண்மையான மணல் குன்றுகளிலும் மலர் செறிந்த பூஞ்சோலைகளிலும் குளிர்ந்த ஆற்றிடைக் குறைகளிலும் மரக்கிளைகள் நிழல் தரும் தண்ணீர்த் துறைகளிலும் விழா நடைபெறும்.

(iii) அந்த இருபத்தெட்டு நாள்களிலும் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவி வருவர் என்பதை நன்கு அறியுங்கள்.

**வாழ்த்தி அறிவித்தல் :** ஒளிவீசும் வாளேந்திய காலாட்படையினரும் தேர்ப்படையினரும் குதிரைப் படையினரும் யானைப் படையினரும் சூழ்ந்து வர, அகன்ற முரசினை அறைந்து, "பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாகுக" என வாழ்த்தி மேற்கண்ட செய்திகளை நகருக்கு முரைசறைவோன் அறிவித்தான்.



## அணி இலக்கணம்

கவிஞர்கள் தம் மனத்தில் எழும் கருத்துக்களைச் சொல்லழகும், பொருள் அழகும் தோன்ற அழகுபடுத்தி பாவியற்றுகின்ற திறத்தைக்கூறும் இலக்கணம் அணி இலக்கணம் எனப்படும்.

### 1. உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

கவிஞர் தாம் கூறக் கருதிய பொருளை அதன் தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு உவம உருபுகள் வெளிப்படையாக வரும்படி ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

**பாடலின் பொருள்:**

பல்வகைக் கருவிகளைக் கொண்டு தன்னை அகழ்கின்ற மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருள்களையும் கொடுத்துக் காப்பாற்றுகின்ற நிலத்தைப் போன்று, தன்னை அவமதித்துத் துன்புறுத்துபவர்களையும், பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்வதே தலையாய பண்பு.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


# அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (1 × 5 = 5)

1. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள்–எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் –அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம்–பட்டிமண்டபம்

2. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று–
அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.
ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

5. பட்டிமண்டபம் என்பது ......................
அ) இலக்கிய மரபு ஆ) இலக்கியம்
இ) இலக்கிய வழக்கு ஈ) இலக்கிய நிகழ்வு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (1 × 4 = 4)

6. பெட்டி ..................... செய்தி
7. விழா ................ குழு
8. கிளி .............. பேச்சு
9. தமிழ் ..................... தேன்

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

10. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
11. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
12. பட்டிமண்டபம், பட்டிமன்றம் – இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.
13. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
14. பழமணல் மாற்றுமின்: புதுமணல் பரப்புமின்– இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 5 = 10)

15. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?
16. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
17. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்யவேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.
18. மணிமேகலை நூல் குறிப்பு வரைக.
19. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.
20. ஏகதேச உருவக அணி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores

# இயல் 6 கலை பல வளர்த்தல்

## பாடப் பகுதி

| | |
|---|---|
| உரைநடை உலகம் | சிற்பக்கலை |
| கவிதைப் பேழை (செய்யுள்) | இராவண காவியம் – புலவர் குழந்தை<br>நாச்சியார் திருமொழி – ஆண்டாள் |
| விரிவானம் (துணைப்பாடம்) | செய்தி – தி. ஜானகிராமன் |
| கற்கண்டு (இலக்கணம்) | புணர்ச்சி |
| வாழ்வியல் | திருக்குறள் |




## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று...................** ※

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி

இ) திருபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

**[விடை: அ) மாமல்லபுரம்]**

**2. ‘பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்’ நிலப் பகுதி.............** ※

அ) குறிஞ்சி ஆ) நெய்தல்

இ) முல்லை ஈ) பாலை **[விடை: இ) முல்லை]**

**3. மரவேர் என்பது ................. புணர்ச்சி** ※

அ) இயல்பு ஆ) திரிதல்

இ) தோன்றல் ஈ) கெடுதல் **[விடை: ஈ) கெடுதல்]**

**4. ‘அதிரப் புகுதக் கனாக் கண்டேன்’ - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?**

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

**[விடை: ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


**6. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?** ※

எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு சிறுவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

## சிறுவினா

**1. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?** ※

| முழு உருவச் சிற்பங்கள் | புடைப்புச் சிற்பங்கள் |
|---|---|
| உருவத்தின் முன் பகுதியும் பின் பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்து சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். | முன் பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். |
| தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழு வடிவ உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலைநயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். | இந்தச் சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது. |

**2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?**

**நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் :**

(i) நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர்.

(ii) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமமேசுவரம் பெருங்கோவில், திண்டுக்கல் அருகே தாடிக் கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன்கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காண முடியும்.

(iii) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆயிரங்கால் மண்டபத்தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக்கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவநெளிவு, நக அமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலை நயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

**3. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.**

(i) **குன்று போல :** முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர்.

(ii) **எருதின் கொம்புகளைப் போல :** சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர்.



www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


(ii) பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச் சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காணலாம். பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும்.

(iii) கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

(iv) பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

**பாண்டியர் காலச் சிற்பங்கள் :**

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோவில்களில் சிற்ப வேலைபாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார் பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில் பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான் கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக் கலைக்குச் சான்றுகளாகும்.

**சோழர் காலச் சிற்பங்கள் :**

(i) கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில். முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம்.

(ii) இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர்காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றன. சோழர் காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும் மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன.

(iii) சோழர் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன. தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற் காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

(iv) சோழர்கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முகபாவனை கற்சோழர் காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச் சிறந்த சான்றுகளாகும்.

**முடிவுரை :**

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களைக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல, அவை வரலாற்றுப் பதிவுகளாகும். மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும். அத்தகு சிறப்புமிக்க சிற்பக்கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.


www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க:**

1. Strengthen the body – உடலினை உறுதி செய். ※
2. Love your Food – ஊன்மிக விரும்பு. ※
3. Thinking is great – உயர்வானதையே நினை. ※
4. Walk like a bull – எருதைப் போல நட. ※
5. Union is Strength – ஒற்றுமையே வலிமை.
6. Practice what you have learnt – எதைக்கற்கிறாயோ அதைப் பயிற்சியாக்கு.

(- Putiya Athichoti by Bharathiyar) (– புதிய ஆத்திசூடி பாரதியார்)

### மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத் தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன்.

(எ.கா.) எட்டாக்கனி – முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

1. **உடும்புப்பிடி** – வேலன் ஆசிரியர் கூறிய அறிவுரைகளை உடும்ப்பிடியாய் பிடித்துக் கொண்டு படித்து வாழ்க்கையில் முன்னேறினான்.
2. **கிணற்றுத்தவளை** – உலகம் அறியாதவன்.
   முத்துமாணிக்கம் பழமையில் மூழ்கி கிணற்றுத் தவளையாக வாழ்ந்து வந்தான்.
3. **ஆகாயத்தாமரை** – இல்லாத ஒன்று. ※
   அன்றாட வாழ்வுக்கே அல்லல்படும் ஏழைகளுக்குச் சொந்த வீடு என்பது ஆகாயத் தாமரையாய் உள்ளது.
4. **எடுப்பார் கைப்பிள்ளை** – இடத்துக்குத் தக நடத்தல்.
   சீவகன் எடுப்பார் கைப்பிள்ளையாய் இருந்தமையால் குடிலன் அவனை எளிதில் வஞ்சித்துவிட்டான்.
5. **மேளதாளத்துடன்** – மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்க வந்த கந்தனை மக்கள் மேளதாளத்துடன் வரவேற்றனர்.


www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

## நிற்க அதற்குத் தக

என்னை மகிழச் செய்த பணிகள்

(எ.கா)

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்பறையில் கரும்பலகையின்கீழ் சிதறிக்கிடந்த சுண்ணக்கட்டித் துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத்தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைத்தட்டல் பெற்றேன்.
3. என் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் வருகை புரிந்த முக்கிய பிரமுகர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். ஏனெனில் மரக்கன்றுகள் நடுவதற்கு என் பள்ளித் தோழர்களுடன் உதவி செய்த நற்செயல்களுக்காக மீண்டும் வாழ்த்துப் பெற்றேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. குடைவரைக் கோவில் – Cave temple | 2. கருவூலம் – Treasury |
| 3. மதிப்புறு முனைவர் – Honorary Doctorate | 4. மெல்லிசை – Melody |
| 5. ஆவணக் குறும்படம் – Document short film | 6. புணர்ச்சி – Combination |

## கற்பவை கற்றபின்

### சிற்பக்கலை

**1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.**

எங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக்குறிப்பை உருவாக்குவதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிற்பக்கலை :**

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை.

**சிற்பங்களின் வகைகள் :**

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

**முழு உருவம் :**

உருவத்தின் முன் பகுதியும் பின் பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம்.



www.surabooks.com

**எடுத்துக்காட்டு :**

ஆடி சென்றது – இது ஆடி மாதம் சென்றது என்னும் பொருளைத் தருகின்றது.

ஆடிச் சென்றது – இது ஏதோ ஒன்று ஆடிக்கொண்டே சென்றது என்னும் பொருளைத் தருகின்றது. இதில் வல்லினம் மிகாததும் மிகுதலும் இரண்டிற்கும் இடையே பொருள் வேறுபாடு தருகின்றது.

**எடுத்துக்காட்டு :**

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தனிமையுடன் திகழ்கின்றன.

**இ. கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில்' அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை'யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்தை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

1. தொன்மை + ஆன – தொன்மையான
2. நூல் + ஆகிய – நூலாகிய
3. தொல்காப்பியம் + இல் – தொல்காப்பியத்தில்
4. சிற்பம் + கலை – சிற்பக்கலை
5. அ + கல்லில் – அக்கல்லில்
6. தமிழக + சிற்பம் + கலை – தமிழகச் சிற்பக்கலை
7. இதனை + கொள்ளலாம் – இதனைக் கொள்ளலாம்
8. கண்ணகிக்கு + சிலை – கண்ணகிக்குச் சிலை
9. சுதை + சிற்பங்கள் – சுதைச் சிற்பங்கள்
10. அறிய + முடிகிறது – அறிய முடிகிறது.

**உ) படக்காட்சியிலிருந்து இருசொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.**



கலை பல வளர்த்தல்

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


எ.கா. மரக்கிளை – விகாரப் புணர்ச்சி, மூன்று பெண்கள் – இயல்புப் புணர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| (i) | மரம் + கிளை | = மரக்கிளை | – விகாரப் புணர்ச்சி |
| (ii) | ஏர் + மாடு | = ஏர்மாடு | – இயல்புப் புணர்ச்சி |
| (iii) | தண்ணீர் + குடம் | = தண்ணீர்க்குடம் | – தோன்றல் விகாரம் |
| (iv) | ஏர் + உழவு | = ஏருழவு | – திரிதல் விகாரம் |
| (v) | துணி + துவைத்தல் | = துணை துவைத்தல் | – இயல்புப் புணர்ச்சி |

## வாழ்வியல்

# திருக்குறள்

### புல்லறிவாண்மை

**1. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.**

**தெளிவுரை** : சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல் இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!

**2. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.**

**தெளிவுரை** : அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான்! அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவானாகத் தோன்றுவான்.

### இகல்

**3. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.**

**தெளிவுரை** : துன்பத்தில் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால், இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம்.

### குடிமை

**4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.**

**தெளிவுரை** : கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும், ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

# கற்பவை கற்றபின்

**1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

இ. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**விடை: இ) சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.**

**2. பொருளுக்குகேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | | விடைகள் |
|---|---|---|
| பகைவரையும் நட்பாக்கும் கருவி | கண்டானாம் தான்கண்ட வாறு. | மாற்றாரை மாற்றும் படை |
| தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான். | அறம்நாணத் தக்கது உடைத்து. | கண்டானாம் தான்கண்ட வாறு. |
| அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும். | மாற்றாரை மாற்றும் படை | அறம்நாணத் தக்கது உடைத்து. |

**3. ஐந்து சால்புகளில் இரண்டு**

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

[விடை: ஆ) நாணமும் இணக்கமும்]

**4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| ஒ | ப் | பு | று |
| க | ப | ர | வ |
| ட | டை | வு | த |
| ல் | உ | ழ | வ |
| ம் | ற | அ | ர் |

அ) அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள்............. [விடை: ஒப்புரவு]

ஆ) உலகத்துக்கு அச்சாணி போன்றவர்.................. [விடை: உழவர்]

இயல் 6

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


"நம்ம புள்ள முதன் முதலா அரசாங்க உத்தியோகத்திற்குப் போகப் போறான் அவனை வாழ்த்தாம(ல்) இப்படி மசமசன்னு நிக்கிறீயே இதுக்கு என்ன அர்த்தம்?" ஒரே மூச்சில் பேசி முடித்தாள் இராமாயி.

"படிச்ச புள்ள உத்தியோக பாக்கப் போற புள்ள அந்தப் புள்ளைய போய் அவன் இவன்னு பேசலாமா? அது தப்பா தெரியலையா உனக்கு?" கோபத்தில் முகம் சிவந்தது மூக்கையனுக்கு.

"தப்புதான் இனிமே அப்படி சொல்லமாட்டேன். என்னை நா(ன்) திருத்திக்க முயற்சி பண்றேன்" கெஞ்சும் குரலில் பேசினாள் இராமாயி.

"என்னம்மா நீ? புரியாம(ல்) பேசறே! நாட்டுக்கே இராசவானாலும் அவன் தாய்க்கு அவன் மகன்தான்! என்ன மெத்த படிச்சாலும் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் இந்த முத்து உனக்கு மகன்தானம்மா" கண்கள் குளமாயின முத்துவுக்கு.

"போதும் போதும் நிறுத்துங்க... நா(ன்) சொல்ல வந்ததையே மறந்திடுவேன். முத்து நீ முதல் முதலா(க்) உத்தியோகத்திற்குப் போகப் போறே அங்கே நீ எந்த சூழ்நிலையிலும் தப்பு பண்ணிடாதே அவ்வளவுதான் நான் சொல்றது" பேச்சை முடித்தான் மூக்கையன்.

"எந்தச் சூழ்நிலையிலும் நான் தப்பு பண்ணமாட்டேன்.' ஒற்றை வரியில் சொல்லி முடித்தான் முத்து.

காலம் கடந்தது. முத்து தன் உழைப்பால் உயர்ந்தான். நேர்மை அவன் வாழ்க்கையில் வசந்தமாக வந்து நின்றது. காலம் கனிந்தது. தன்னை உணராத மனைவி வந்து சேர்ந்தாள். பணம், பணம் என நச்சரித்தாள். நேர்மையாக இருந்த முத்து முதன்முதலாக தடம் புரண்டான். அதன் விளைவு கையூட்டு, கையாடல் எனப் பட்டியல் நீண்டது. நேர்மையாக இருந்து வாழ்ந்த மூக்கையன் மகனின் செயலைக் கண்டு மனம் வருந்தினான். மரணம் அவனைத் தழுவிக் கொண்டது. நிலம், நீர் கையை விட்டுப் போனது. இராமாயி நிர்மூல மானாள். முத்து கைதானான். நேர்மை தந்த பரிசு மூக்கையன் உயிரைப் பறித்தது. முத்துவின் மனைவி மீனா புரிந்து கொண்டாள். நேர்மை தந்த பரிசு மரணம் அல்ல அது ஒரு வாழ்க்கைப் பாடம். கணவனை மீட்க வழக்குரைஞரைப் பார்க்க ஆயத்தமானாள் மீனா.

## வினாக்கள்

**1. இறக்கும்வரை உள்ள நோய் எது?**

சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல் இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய் ஆகும்!

**2. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ[டு]
ஐந்துசால்பு ஊன்றிய தூண். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கி எழுதுக.**

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ஏகதேச உருவக அணி.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

**ஏகதேச உருவக அணி என்பதன் விளக்கம் :**

கவிஞர் தாம் கூறக் கருதிய தொடர்புள்ள இருபொருள்களில் ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

அன்பு நாண்ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்.

**பாடலின் பொருள் :**

பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும், அனைவரிடமும் இணக்கமும், இரக்கமும், உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

**அணி விளக்கம் :**

இக்குறட்பாவில் கவிஞர் பிறரிடம் அன்பும், பழிக்கு நாணம் கொள்ளுதலும், இணக்கமாக இருத்தலும் இரக்கமும் உண்மையும், சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் என்கிறார். ஆனால் சான்றாண்மையைச் சுமையாய் உருவகப்படுத்தாமையால் ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**3. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?**

உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் உழவர். மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவார்.

**4. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. - இக்குறட்பாவில் பயின்று வரும் தொடைநயத்தை எழுதுக.**

**தொடை நயம் :**

மோனைத் தொடை – செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடையாகும். <u>கா</u>ணாதான், <u>க</u>ண்டானாம்.

எதுகைத் தொடை – செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடையாகும். கா<u>ணா</u>தான், க<u>ண்</u>டானாம்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. ......... கோவிலில் ஆயிரங்கால் மண்டபத் தூண்கள் உள்ளன.**

அ) மதுரை மீனாட்சி அம்மன் ஆ) காஞ்சி கைலசநாதர்
இ) பேரூர் சிவன் [விடை: **அ) மதுரை மீனாட்சி அம்மன்**]

www.surabooks.com

2. 'அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்' நிலப்பகுதி...............

அ) முல்லை ஆ) குறிஞ்சி

இ) பாலை [விடை: ஆ) குறிஞ்சி]

3. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் .......

அ) இராவண காவியம் ஆ) கம்பராமாயணம்

இ) பெரியபுராணம் [விடை: அ) இராவண காவியம்]

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. நாயக்க மன்னர் பல இடங்களில் ...... அமைத்தனர். [விடை: ஆயிரங்கால் மண்டபங்கள்]
2. காஞ்சி ........... கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. [விடை: கயிலாச நாதர்]
3. ................ எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம். [விடை: இராமாயணத்தில்]
4. இராவண காவியத்தை இயற்றியவர் ............ [விடை: புலவர் குழந்தை]
5. குறிஞ்சிநிலப் பறை .................... [விடை: முருகியம்]
6. அருவி ஆர்ப்பரித்து விழும் நிலம் ............... [விடை: குறிஞ்சி]
7. நாச்சியார் திருமொழி மொத்தம் ................ பாடல்களைக் கொண்டது. [விடை: 140]
8. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ........... [விடை: ஆண்டாள்] ※
9. நாகசுரத்தின் மேல் பகுதியில் ........... என்ற கருவி பொருத்தப்படுகிறது. [விடை: சீவாளி]
10. விகாரப் புணர்ச்சி ........... வகைப்படும். [விடை: மூன்று]

## இலக்கணக் குறிப்பு

1. கொட்ட – வினையெச்சம்
2. முத்துடைத்தாமம் – இரண்டாம் வேற்றுமைத்தொகை
3. இடிகுரல் – உவமைத்தொகை
4. பிடிபசி – வேற்றுமைத்தொகை
5. பைங்கிளி, கருமுகில் – பண்புத்தொகைகள்
6. பூவையும் குயில்களும், முதிரையும் சாமையும் வரகும் – எண்ணும்மைகள்
7. முதுவெயில், பெருங்கடல் – பண்புத்தொகை
8. இன்னிளங்குருளை – பண்புத்தொகை
9. அதிர்குரல், வருமலை – வினைத்தொகைகள்




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

10. மன்னிய - பெயரெச்சம்
11. கடிகமழ் - உரிச்சொற்றொடர்
12. மலர்கண்ணி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.
13. எருத்துக்கோடு - ஆறாம் வேற்றுமைத்தொகை
14. கரைபொரு - இரண்டாம் வேற்றுமைத்தொகை
15. மரைமுகம் - உவமைத்தொகை
16. வெரீஇ - சொல்லிசை அளபெடை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. தொட்டு - தொடு(தொட்டு) + உ
   தொடு - பகுதி 'தொட்டு' என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது விகாரம்.
   உ - வினையெச்ச விகுதி
2. கண்டேன் - காண்(கண்) + ட்+ ஏன்
   காண் - பகுதி 'கண்' எனக் குறுகியது விகாரம்
   ட் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
3. பருகிய - பருகு + இன் + ய் + அ
   பருகு - பகுதி
   இன் - இறந்தகால இடைநிலை (ன் கெட்டது விகாரம்)
   ய் - உடம்படுமெய்
   அ - பெயரெச்ச விகுதி
4. பூக்கும் - பூ + க் + க் + உம்
   பூ - பகுதி
   க் - சந்தி
   க் - எதிர்கால இடைநிலை
   உம் - வினைமுற்று விகுதி

### குறுவினாக்கள் :

1. **சிற்பக்கலை என்பதன் பொருளை விளக்குக.**
   கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக் கலை எனலாம்.
2. **சிற்பங்களின் வகைகள் யாவை?**
   சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள்.



www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


**3. முழு உருவச் சிற்பங்கள் என்றால் என்ன?**

உருவத்தின் முன் பகுதியும் பின் பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம்.

**4. 'கற்கவிஞர்கள்' எனப் போற்றப்படுகின்றவர்கள் யாவர்?**

சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களை, 'கற்கவிஞர்கள்' என்று சிறப்பிக்கின்றனர்.

**5. எத்தனை நிலைகளில் உருவங்கள் இருக்கின்றன?**

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ(பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

**6. தமிழகச் சிற்பக் கலையின் தனிச்சிறப்புகள் யாவை?**

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. யோகக்கலை, நாட்டியக்கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெற்றுள்ளன.

**7. பாண்டியர் காலச் சிற்பங்கள் - விளக்கம் தருக.**

(i) பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம்.

(ii) கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான் கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக் கலைக்குச் சான்றுகளாகும்.

**8. புணர்ச்சி என்றால் என்ன?**

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணைவது புணர்ச்சி ஆகும்.

**9. புல்லறிவாண்மை திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.**

(i) சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல் இருப்பவருடைய உயிர், சாகும்வரை உள்ள நோய்.

(ii) அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான். அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்.

**10. 'இகல்' - வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

துன்பத்தில் மனக் கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால், இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம்.

**11. 'குடிமை' - வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

கோடிப்பொருள் அடுக்கிக் கொடுத்தாலும் ஒழுக்கமான குடியில் பிறந்தவர் தவறு செய்வதில்லை.


www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


**12. சான்றாண்மையின் தாங்கும் தூண்கள் யாவை?** ※

(i) பிறரிடம் அன்பாய் இருத்தல்.

(ii) பழிச்செயல் செய்ய வெட்கப்படுதல்.

(iii) அனைவரிடமும் இணக்கமாய் இருத்தல்.

(iv) இரக்கம் காட்டுதல்.

(v) உண்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

**13. 'சான்றாண்மை' - வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

(i) பிறரிடம் அன்பும், பழிக்கு நாணுதலும், அனைவரிடமும் இணக்கமும், இரக்கமும், உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

(ii) செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல், அதுவே சான்றார்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.

(iii) ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக் கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்.

**14. 'நாணுடைமை' - வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்.

**15. 'உழவு' - வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

பல தொழில்களில் இயங்கினாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும். அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது. மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.

## சிறுவினாக்கள் :

**1. பல்லவர் காலச் சிற்பங்கள் - குறிப்பு வரைக.**

(i) பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

(ii) கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகுப்பெற்றன.

(iii) தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன.

(iv) பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காணலாம்.

**2. பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் ஓர் எடுத்துக்காட்டு இக்கூற்றினை விளக்குக.**

(i) பல்லவர்காலச் சிற்பக் கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும்.

(ii) கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

(iii) அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

**3. பல்லவர் காலச் சிற்பங்களுக்கு காஞ்சிபுரம் கோயில்கள் நற்சான்று இதனை விளக்குக.**

(i) காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர்(முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

(ii) அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன.

(iii) பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**4. கற்சிற்பங்கள் அமைக்கும் கலை யார் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது? காரணம் கூறுக.**

(i) கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம். இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில்.

(ii) இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.



**5. சோழர்காலச் சிற்பத் திறனுக்குச் சான்றுகளாக அமைந்த கோவில்களைப் பற்றி குறிப்பிடுக.**

**தஞ்சைப் பெரிய கோவில் :**

தஞ்சைப் பெரிய கோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்கள். மிகப்பெரிய நந்தி, வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் இவையாவும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**கங்கை கொண்ட சோழபுரம் :**

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும், சிங்கமுக கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

**புதுக்கோட்டை :**

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை.

**திருச்சிராப்பள்ளி :**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாச நல்லூரில் உள்ள குரங்க நாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.

**திருவரங்கம் :**

சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முகபாவனைகள் சோழர் காலச் சிறப்க்கலை நுட்பத்திற்கு மிகச் சிறந்த சான்றுகளாகும்.

6. **பௌத்த சமணச் சிற்பங்கள் - குறிப்பு வரைக.**

(i) **பௌத்தம் :** பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த(கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிப்பட்டனர்.

(ii) **சமணம் :** சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன. சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளில் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

7. **இன்றைய சிற்பக்கலை - குறிப்பு வரைக.**

(i) தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல் பைஞ்சுதை(சிமெண்ட்) கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

(ii) வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன.

(iii) இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்து பல துறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்தி மிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.

(iv) சிற்பங்கள் வரலாற்றுப் பதிவுகளாகும். மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும். அத்தகு சிறப்புமிக்க சிற்பக்கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

8. **இராவண காவியத்தில் நெய்தல் நிலக் காட்சியினை விளக்குக.**

**இராவண காவியத்தில் நெய்தல் நிலக்காட்சி:**

(i) தூய ஒழுக்கமுறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள்.

(ii) அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் வந்து குவிப்பர்.

(iii) தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும், பின்னர் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கி தொடர்ந்து செல்லும்.

(iv) அது வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.



www.surabooks.com

**9. இராவண காவியத்தில் மருத நிலக் காட்சியினை விளக்குக.**

**இராவண காவியத்தில் மருத நிலக் காட்சி:**

(i) மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும். அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும்.

(ii) பெருகி வரும் நீரினைக் கால்வாய் வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும்.

(iii) இத்தகுவளம் நிறைந்த மருத நில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

(iv) தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர்.

(v) சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற்போர் குலுங்கிடும்படி ஏறி தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மரநிழலில் அமர்ந்து அருந்தினர்.

**10. இராவண காவியத்தில் பாலை நிலக்காட்சியினை விளக்குக.**

**இராவண காவியத்தில் பாலை நிலக்காட்சி :**

கொடிய பாலை நிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்டு அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழல் இல்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது. சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்தோடு பறந்தோடின.

**11. சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் பற்றி எழுதுக.**

(i) 1970 – அன்பளிப்பு(சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி

(ii) 1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஜானகிராமன்

(iii) 1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்

(iv) 1996 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்ரன்

(v) 2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி

(vi) 2010 – சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்

(vii) 2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

**12. புணர்மொழியின் இயல்பு விளக்கம் தருக.**

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

**எடுத்துக்காட்டு :**

(i) கலை + அழகு – உயிரீறு

(ii) மண் + குடம் – மெய்யீறு

(iii) வாழை + இலை – உயிர்முதல்

(iv) வாழை + மரம் – மெய்ம்முதல்



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

(i) உயிர்முன் உயிர் – மணி(ண்+ இ) + அடி = மணியடி

(ii) உயிர்முன் மெய் – பனி + காற்று = பனிக்காற்று

(iii) மெய்ம்முன் உயிர் – ஆல் + இலை = ஆலிலை

(iv) மெய்ம்முன் மெய் – மரம் + (க் + இ) கிளை = மரக்கிளை.

**13. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.**

புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும். புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப்படுத்தலாம். இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என்பவையாகும்.

**எடுத்துக்காட்டு :**

வாழை + மரம் = வாழைமரம்

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை.

**14. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக. [அ] விகாரப் புணர்ச்சியின் வகைகளைச் சான்றுகடன் விளக்குக.** ※

புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல்.

**எடுத்துக்காட்டு :**

(i) நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு(தோன்றல்)

(ii) கல்லூரி + சாலை = கல்லூரிச் சாலை(தோன்றல்)

(iii) பல் + பசை = பற்பசை(திரிதல்)

(iv) புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

**15. உடம்படுமெய் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.**

உயிரை ஈறாக உடைய சொற்களின் முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும். அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும். ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர். நிலைமொழியின் ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின் முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

**எடுத்துக்காட்டு :**

(i) மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

(ii) தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

(iii) ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

கலை பல வளர்த்தல்



www.surabooks.com

**16. இ, ஈ, ஐ தவிர பிற உயிரிடன் வருமொழியில் உள்ள உயிரெழுத்துகள் எவ்வாறு புணரும்?**

இ, ஈ, ஐ தவிர பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும் போது அவற்றின் முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.

**எடுத்துக்காட்டு :**

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்.

**17. நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து வரும் மொழியில் உயிர்வரின் எவ்வாறு புணரும்?**

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

**எடுத்துக்காட்டு :**

சே + அரி = சே + ய் + அரி = சேயரி

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

இவனே + அவன்= இவனே + ய் + அவன் = இவனேயவன்.

**18. குற்றியலுகரப் புணர்ச்சி சான்றுடன் விளக்குக.**

வட்டு + ஆடினான் = வட்(ட் +உ) + ஆடினான்

= வட்ட் + ஆடினான் = வட்டாடினான்.

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியில் உள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மொழியுடன் இணையும்.

**19. குற்றியலுகரம் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக் கூறுக.**

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம்(கு,சு,டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

**எடுத்துக்காட்டு :**

(i) நாக்கு, வகுப்பு – வன்தொடர்க் குற்றியலுகரம்

(ii) நெஞ்சு இரும்பு – மென்தொடர்க் குற்றியலுகரம்

(iii) மார்பு, அமிழ்து – இடைத்தொடர்க் குற்றியலுகரம்

(iv) முதுகு, வரலாறு – உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

(v) எஃகு, அஃது – ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

(vi) காது, பேசு – நெடில் தொடர்க் குற்றியலுகரம்

இயல் 6

www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.com
For Full Book order online and available at all leading Book Stores


## மெய்ம் மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும் போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை 'வலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

(i) 'யகர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.

**எடுத்துக்காட்டு :**

மெய் + மயக்கம் = மெய்ம்மயக்கம்

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி = செய்ந்நன்றி

(ii) வேற்றுநிலை மெய்ம் மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் மெல்லினம் மிகும்.

**எடுத்துக்காட்டு :**

வேய் + குழல் = வேய்ங்குழல்

கூர் + சிறை = கூர்ஞ்சிறை

பாழ் + கிணறு = பாழ்ங்கிணறு

(iii) 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி மெல்லினமும் மிகும்.

**எடுத்துக்காட்டு :**

புளி + கறி = புளிங்கறி

புளி + சோறு = புளிஞ்சோறு

(iv) உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.

**எடுத்துக்காட்டு :**

மா + பழம் = மாம்பழம்

விள + காய் = விளங்காய்

(v) 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

**எடுத்துக்காட்டு :**

பூ + கொடி = பூங்கொடி

பூ + சோலை = பூஞ்சோலை

பூ + தொட்டி = பூந்தோட்டி

☆ ☆ ☆

கலை பல வளர்த்தல்

www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

# அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (1 × 5 = 5)

1. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று....................
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திருபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2. ‘அதிரப் புகுதக் கனாக் கண்டேன்’ – யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
   ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

3. ‘பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்’ நிலப் பகுதி............
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல்
   இ) முல்லை ஈ) பாலை

4. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ...................
   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

5. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் .......
   அ) இராவண காவியம் ஆ) கம்பராமாயணம்
   இ) பெரியபுராணம் ஈ) சிலப்பதிகாரம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (1 × 4 = 4)

6. நாச்சியார் திருமொழி மொத்தம் ................ பாடல்களைக் கொண்டது.
7. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ...........
8. மரவேர் என்பது ................ புணர்ச்சி
9. ......... கோவிலில் ஆயிரங்கால் மண்டபத் தூண்கள் உள்ளன

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

10. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
11. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
12. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?
13. இராவண காவியத்தில் பாலை நிலக்காட்சியினை விளக்குக.
14. குற்றியலுகரப் புணர்ச்சி சான்றுடன் விளக்குக.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 5 = 10)

15. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?
16. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.
17. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.
18. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
19. தற்காலத் தமிழில் குற்றியலிகரத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்திகிறோம்?
20. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் ‘செய்தி’ கதையின் மூலமாக விளக்குக.

☆ ☆ ☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Our other Guides for 9th Std.





































**For Orders Contact: 9600175757 / 81242 01000 / 81243 01000**

**Order through WhatsApp 81242 01000 / 98409 26027**

**Sura Publications**
1620, 'J' Block,
16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. INDIA
Phones: 044-26162173, 26161099
Mobile: 81242 01000 / 81243 01000
e-mail: enquiry@surabooks.com
website: www.surabooks.com

Category:
School Guides

SG 60

ISBN 978-81-8449-558-4

9 788184 495584

**Price: ₹299.00**